வன்கொலைகள் - குறுநாவல்

அத்தியாயம்- 1

சக்திரூபன், ஒரு ஆடம்பரமான காபி ஷாப்பின் மூலையில் இருந்த டேபிளில் அமைதியாக அமர்ந்திருந்தான். எதிரில் இருந்த 'எஸ்பிரெஸ்ஸோ' கோப்பையில் இருந்து மெல்லிய ஆவி எழுந்தது. அவன் உதடுகள் அதை ரசித்தாலும், அவனது கண்கள் ஷாப்பின் மறுமுனையில் குடும்பத்துடன் விளையாடிக் கொண்டிருந்த ஒரு மூன்று வயதுக் குழந்தையின் மீது நிலைத்திருந்தன.

அந்தச் சின்னஞ்சிறு குழந்தை, ரோஜா இதழ்களைப் போல சிவந்த கன்னங்களுடன், கலகலவென சிரித்தபடி ஒரு eddy Bear பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தது. அதன் பிஞ்சு கைகள் பொம்மையைத் தூக்கிப் போடுவதும், விழுந்ததும் மீண்டும் குனிந்து எடுப்பதும் என அந்தக் காட்சி, சக்தியின் முகத்தில் மெல்லிய புன்னகையை வரவழைத்தது.

சட்டென்று, துருவன் பரபரப்புடன் அவன் அருகில் வந்து அமர்ந்தான். அவன் முகத்தில் கோபமும், கவலையும் கலந்திருந்தன.

"டேய் சக்தி! என்னடா இது... நீ பாட்டுக்கு Sick Leave போட்டுட்டு உட்கார்ந்து இருக்க. நாட்ல என்ன நடக்குதுன்னு தெரியுமா உனக்கு?" துருவனின் குரல் சற்று உயர்ந்திருந்தது.

சக்தி, தன் கையில் இருந்த காபியை ஒரு Sip எடுத்துக்கொண்டே, "தெரிஞ்சு நான் என்ன பண்ணனும்? உலகத்துல ஆயிரம் பிரச்சனை

இருக்கு. நான் மட்டும் எல்லாத்துக்கும் Serious இருக்க முடியுமா?" என்று குழந்தையின் சிரிப்பிலேயே கண்களை வைத்தப்படிக் கேட்டான்.

"டேய் பொறுப்பா பேசுடா நீ! நீ சாதாரணன் இல்ல. ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் யூனிட்ல ஒரு ஆபீசர்"

" So what? ஆபீசர்னா உலகத்துல இருக்கிற எல்லா கஷ்டத்தையும் தலையில சுமக்கணுமா? Relax பண்ணக் கூடாதா?" என்று சிரித்தவன், "அங்க பாரு Cute Baby எவ்வளவு சந்தோஷமாக அழகாகச் சிரிக்குது!"என்றான்.

துருவன் தன் தலையை ஆவேசமாக ஒருமுறை ஆட்டி, "நீ ஒரு போலீஸ் ஆபீஸர் டா! யோக டீச்சர் மாதிரி பேசுற?" என்று கத்தினான்.

"ஆமா! அதனால என்ன? மனுஷன் சந்தோஷமா வாழக்கூடாதா? இப்போ விஷயத்துக்கு வா. நீ இவ்வளவு Tense இருக்கிறதப் பார்த்தா, ஏதோ பெரிய Issue போல இருக்கு,"என்று சக்தி, சற்றுத் தன் குரலில் நிதானத்தைக் கொண்டு வந்து கேட்டான்.

"மகராசன்... இப்பதான் லைனுக்கு வந்திருக்க! நா சொல்ல வந்தது என்னன்னு கேளுடா," துருவன் சலிப்புடன் சொன்னான்.

"சரி, சீக்கிரம் சொல்லித் தொலைடா," சக்தி, எதிரில் வந்து டேபிளைத் துடைத்துக் கொண்டிருந்த சர்வர் பெண்ணிடம் லேசாகக் கண்ணசைத்துவிட்டு, துருவனை நோக்கினான்.

"வைரம் குரூப்ஸ் Managing Director மிஸ்டர். பைரவராஜ், இறந்து போயிட்டாரு," துருவன் குரலைத் தாழ்த்தினான்.

"ஆமா... TV- நீயூஸ்-ல சொன்னாங்க. அதுக்கு இப்போ என்ன?"

"அந்த கேஸை நம்மளதான் விசாரிக்கச் சொல்லி இருக்காங்க,"

"ஓ... எனக்கும் மெசேஜ் வந்தது," சக்தி தன் போனை எடுத்துப் பார்த்துவிட்டு, சொன்னான்.

"ஆனா நீ? கொஞ்சம் கூட Seriousness இல்லாம... இங்க உட்கார்ந்து காபி குடிச்சிட்டு இருக்க. அவர் யாருன்னு தெரியுமா?"

"எவனோ செத்ததுக்கு நான் ஏன்டா சீரியஸா இருக்கணும்? இப்ப நான் 'லீவுல' இருக்கேன்," என்ற சக்தி, பில்லைக் கட்டிவிட்டு எழுந்தான்.

"டேய் சக்தி!" துருவன் கத்தியவாறே சக்தியின் பின்னே ஓடி வந்தான்.

"நாளைக்கு நான் Duty ஜாயின் பண்ணிடுவேன். நாளைக்கு வந்து பேஸ் பண்ணுவோம். நீ கிளம்பு," என்று கூறிவிட்டு, சக்தி பைக்கை ஸ்டார்ட் Start செய்து மின்னல் வேகத்தில் அந்த இடத்தை விட்டு மறைந்தான்.

அத்தியாயம்- 2

சக்தி, அடுத்த நாள் காலை ஒன்பது மணிக்கெல்லாம் அலுவலகத்திற்க்கு சென்றுவிட்டான், வழக்கம் போல் இல்லாமல், சற்று சீக்கிரமாகவே வந்திருந்தான். காரணம், மனதின் ஓரத்தில் அந்த 'கேஸ்' குறித்த ஒரு சிறிய ஆர்வம் ஒட்டிக் கொண்டிருந்தது.

"சரி, இப்போ சொல்லு. case Details என்ன?" என்று சக்தி, தன் இருக்கையில் அமர்ந்த படியே துருவனிடம் கேட்டான்.

துருவன் தன் முன்னால் இருந்த File குனிந்து பார்த்தபடி, "வைரம் குரூப்ஸ் MD மிஸ்டர். பைரவராஜ், அவருக்குச் சொந்தமான Resort இறந்து கிடந்தாரு. Postmortem Report ல Heart Attack இறந்ததா சொல்லுது. ஆனா, அவங்க Family Members , இது கொலையாக இருக்குமோன்னு சந்தேகப்படுறாங்க. அதனாலதான் நம்ம கைக்கு இந்த கேஸ் வந்திருக்கு. இது ஒரு 'இம்பார்ட்டன்ட் கேஸ்' சக்தி," துருவன் சீரியஸாய் சொல்லி முடித்தான்.

"ஓகே. இந்தக் கேஸை யாரு ஹேண்டில் பண்ணப் போறா?" சக்தி கேட்டான்.

"என்னடா கேள்வி இது? நாம ரெண்டு பேரும்தான்,"

"நீயும் சூரிபாபுவும் ஹேண்டில் பண்ணுங்க. என்ன விட்டுடு," சக்தி அலட்சியமாகச் சொன்னான்.

"ஏய்! என்னடா பேசுற? நம்ம ரெண்டு பேரும் ஹேண்டில் பண்ணா இந்தக் கேஸை ஒரு வாரத்துல முடிச்சிடலாம். அவன் கூட சேர்ந்த ஒரு வருஷத்துக்கு மேல இழுத்துகிட்டு போகும், அது மட்டும் இல்லாம அவன் பண்றது எல்லாமே என்னை காண்டு ஏத்துற மாதிரியே இருக்கும் ப்ளீஸ்டா என்னை அவன் கூட மட்டும் கோத்து விடாதே," துருவன் கெஞ்சினான்.

"டேய்.. எனக்கு Challenging கேஸ் வேணும்டா. இது மாதிரி ஒரு சாதாரண ஹார்ட் அட்டாக் கேஸை ஹேண்டில் பண்ணி போர் அடிக்குது. எனக்குப் பெரிய 'புலனாய்வு' தேவைப்படுற கேஸ் வேணும்," சக்தி சொன்னான்.

"இந்த கேஸ்லயும் ஒரு சேலஞ்ச் இருக்குடா," என்று துருவன் ஏதோ ஆரம்பிக்க,

"நான் இருக்கேன் மச்சான்! நீ ஏன் கவலைப்படற?" என்று உள்ளே நுழைந்த சூரிபாபு, அறிவில் பரோட்டா சூரியையும் அழகில் யோகிபாபுவையும் கலந்து செய்த கலவையாய், இருந்தான். சக்தி, சூரிபாபுவைப் பார்த்து ஒரு லேசான புன்னகையுடன் அங்கிருந்து வெளியேறினான்.

சூரி, துருவனை கட்டாயப்படுத்தி அழைத்துக்கொண்டு, பைரவராஜின் வீட்டிற்குச் சென்றான். பைரவராஜின் மகன் பிரசன்னாவிடம், "அப்பா எப்படி இறந்தார்னு சொல்ல முடியுமா?" போன்ற வழக்கமான போலீஸ் விசாரணைக் கேள்விகளைக் கேட்டான். அங்கிருந்து கிளம்பி, அலுவலகம் வரும் வழியில், ரோட்டோரக் கடையில் பிரியாணி விற்றுக்கொண்டிருந்ததைப் பார்த்து, "மச்சான், வாடா பிரியாணி சாப்பிட்டு போலாம். செம வாசனையா இருக்கு," என்று துருவனிடம் கூறிக் கடுகடுப்புடன் பைக்கை ஓரங்கட்டினான்.

"டேய்! என்னடா நீ? எவ்வளவு சீரியஸான விஷயத்தை விசாரிச்சிட்டு இருக்கோம். இப்போ போய் நீ பிரியாணி சாப்பிட வந்துட்டியே?," துருவன் கோபப்பட்டான்.

"டேய் எனக்குப் பசிக்குதுடா. அதுமட்டுமில்ல, இந்த Side வரும் போதெல்லாம் இந்த பிரியாணியை சாப்பிடாம போகவே மாட்டேன். வா, ஒரு கட்டு கட்டுவோம்," சூரி, பிரியாணிக்குள் புதைந்து போக, துருவன் அலைபேசியில் சக்தியைத் தொடர்பு கொள்ள முயன்றான். "வேறு ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கிறார்" என்றது. துருவன் கோபத்துடன் தரையை காலால் தட்டினான்.

திடீரென்று துருவனின் hone அலறியது. சக்திதான் அழைக்கிறான் என்று தெரிந்ததும், துருவன் அவசரமாக காது கொடுத்தான்.

"ஹலோ,"

"அப்பிடியா? ஓகேடா மச்சான். உடனே வரேன்," என்று கூறிவிட்டுத் துருவன், சூரிபாபுவைப் பார்த்தான். அவன் பிரியாணியோடு சேர்த்து, பிரியாணி விற்றுக்கொண்டிருந்த பெண்ணிடம் ஏதோ கிண்டலாகப் பேசிக் கொண்டிருந்தான். சூரிபாபுவை அங்கேயே விட்டுவிட்டுத் துருவன் ஆட்டோ பிடித்து அலுவலகத்திற்கு வந்திறங்கினான்.

"சொல்லுடா மச்சி. எதுக்கு போன் பண்ணி உடனே வர சொன்ன?" துருவன், வேர்க்க விறுவிறுக்க வந்து நாற்காலியில் அமர்ந்தபடியே கேட்டான்.

"Leading Lawyer சரவணன் தெரியுமா?" சக்தி கேட்டான்.

"ஓ... தெரியும். வைரம் குரூப்ஸுக்கு இவர்தான் பல வருஷமா வாதாடிட்டு இருந்தார்னு கேள்விப்பட்டேன்." என்றான்.

"அவர் இன்னைக்குக் காலைல ஆறு மணிக்குத் திருச்சிக்குப் கிளம்பினார். சென்னையத் தாண்டுறதுக்குள்ளயே ஆக்சிடெண்ட்ல செத்துப் போயிட்டாரு. அவருடைய மனைவி முருகப் பிரியா, 'அவருடைய எதிரிகள் தான் ஆக்சிடெண்ட் பண்ணி கொன்னுருப்பாங்க'னு Statement கொடுத்திருக்காங்க,"என்று சக்தி நிறுத்தினான்.

"சரி, அந்தக் கேஸை நீ எடுக்கப் போறியா?" துருவன் கேட்டான்.

" Commissioner எனக்கு Choice கொடுக்கல. ரெண்டு கேஸையும் விசாரிக்கச் சொல்லி, wo Days தான் டையம் கொடுத்துருகாரு, நாளைக்கு எவினிங்க் ரிப்போர்ட் சப்மிட் பண்ணச் சொல்லி இருக்காரு," என்றான்.

"அது சரி" என்று சலித்துக் கொண்ட துருவன்,"அந்த கிறுக்குப் பைய சூரி, பிரியாணிக் கடை, பஜ்ஜிக் கடைன்னு என்னைக் கூட்டிட்டு விசாரணைங்கிற பேர்ல சுத்திக்கிட்டு இருக்கான் இதுல இந்த கேஸ்ச," துருவன் பேசி முடிப்பதற்க்கு முன்பே, சூரிபாபு உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

"என்னடா மச்சான், சொல்லாம கொல்லாம பிரியாணி சாப்பிட்டு இருந்தவனை நடுரோட்ல விட்டுட்டு வந்துட்ட?" என்று கத்தினான்.

"சூரி, நாங்க ரெண்டு பேரும் வேற ஒரு கேஸ் பத்தி Discuss பண்ண வேண்டி இருக்கு. நீ போய் கொஞ்ச நேரம் Rest எடுத்துக்கோ. பிரியாணி சாப்பிட்ட டயர்டா இருக்கும்," சக்தி புன்னகையோடு சொல்ல, சூரியும் தலையசைத்துவிட்டுக் கிளம்பினான். துருவனும் சக்தியும் சூரிபாபு ஏன் இப்படி இருக்கிறான் என்று புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அத்தியாயம்- 3

சூரி வெளியேறியதும், அங்கு சில நிமிடங்கள் அமைதி நிலவியது, துருவன், சக்தி இருவருமே துப்பறிவதில் புலிகள் தான். ஆனால், சில சமயங்களில் அந்த புலிகளும் தடுமாறு நிற்பது உண்டு.
ஒரே நிறுவனத்தை சார்ந்த இரண்டு நபர்கள் அதுவும் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கும் இருவர் அடுத்தடுத்து மரணம் அடைவது என்பது சாதாரண நிகழ்வாக அவர்களுக்கு தோன்றவில்லை. சக்தி ஜன்னல் கம்பிகளை பிடித்துக் கொண்டு வெளியே பார்த்தபடி இருந்தான். ஆனால், அவனுடைய மனம் தொடர்ந்து அந்த வழக்கை பற்றி யோசித்துக் கொண்டிருந்தது. துருவன், சக்தியின் தோளில் கை வைத்து ஏதோ சொல்ல முயன்றான். ஆனால், அதை இடைமறித்த சக்தி,"லாயர் சரவணனோட மனைவி முருகப் பிரியா, யார் மேல சந்தேகப்படுறதா சொல்லியிருக்காங்க?" என்றான்.

"யாரையும் குறிப்பிட்டுச் சொல்லல. பொதுவாகச் சொல்லியிருக்காங்க. ஆனா, ரெண்டு பெரிய மனுஷங்க, இப்படித் திடீர்னு இறந்து போனது, எனக்குச் சாதாரணமாகத் தெரியல," என்று துருவன் சொல்ல, சக்தி தீவிரமானான்.

அப்போது ஒரு Constable உள்ளே நுழைந்து, "சரவணனோட போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் ரெடி" என்று விறைப்பாய் Salute அடித்து, அதைச் சக்தியிடம் கொடுத்துவிட்டுப் போனார்.

சக்தி அந்த ரிப்போர்ட்டைக் பிரித்து புரட்டியப்படியே,"நான் இதை படிச்சுப் பார்க்கிறேன். நீ போய், பைரவராஜோட போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை எடுத்துட்டு வா. இதுல ஏதாச்சும் Clue இருக்கான்னு பார்க்கலாம்," என்று சக்தி, துருவனைப் பணித்தான். துருவன் விலகி செல்ல, சக்தி, இரண்டு போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்களையும் கமா, புல் ஸ்டாப் பாக்கி இன்றி அலசிப் படித்தான். இரண்டுமே அதிகாரப்பூர்வமாக இயற்கை மரணம் என்றுதான் குறிப்பிட்டிருந்தன.

'ஆனா ஏதோ ஒன்னு இடிக்குதே?' என்று அவனுக்கு தோன்றியது.

சிறிது நேரம் கழித்துத் துருவன் தன் குறிப்புப் புத்தகத்துடன் வந்தான்.

"சக்தி... ரெண்டு கேஸ்லயும் common-ன்னா இருக்குற சில விஷயங்கள் எனக்குத் தோணுது." என்றவன், "ரெண்டு பேருமே சொசைட்டில பெரிய ஆட்கள். ரெண்டு பேருக்கும் நிறைய Properties இருக்கு. ரெண்டு பேருமே அகால மரணம் அடைஞ்சிருக்காங்க. அதுவும், அவங்க குடும்பத்தார் கொலையா இருக்கலாம்னு சந்தேகப்படுறாங்க. இது ஒரு 'Co-incidence மாதிரி தெரியல,அண்ட் இவங்க ரெண்டு பேரும் நண்பர்கள்" துருவன் தன்னுடைய யோசனைகளைச் சொன்னான்.

அப்போது, "அது மட்டும் இல்ல மச்சான்..." என்று சூரிபாபு இடைச் செருகலாய் உள்ளே வந்து நின்றான். ஒருவனுக்கு அவன் மீது எரிச்சல்

வந்தாலும் அமைதியாக நிற்க சக்தி சொல்லு என்பது போல சூரியை பார்த்தான்.

"அவங்க ரெண்டு பேருமே 'Ladies weakness இருக்கிறவங்கன்னு எனக்கு Information கிடைச்சிருக்கு." என்றதும், துருவன், “உனக்கு எப்பிடி தெரியும்?” என்றான்.

“அவங்க வீட்டு வாட்ச்மேன் கிட்ட துட்டு கொடுத்து தெரிஞ்சுக்கிட்டேன்" என்று சூரி சொல்ல துருவன்,"என்னடா இதெல்லாம் ஒரு மேட்டர்னு வந்து சொல்லிக்கிட்டு இருக்க?" என்று

கோபத்துடன் அவனை முறைக்க, சக்தி, "அவன் சொல்றது கரெக்ட்தான்" என்று சூரியின் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தான்.

"நன்றி மச்சான், இந்த மாதிரிப் பெரிய 'Business ஆளுங்கன்னா, அவங்க 'கேரக்டர்' பத்தி நமக்குத் தெரியணும்ல? வெளியில நல்லவங்களா நடிக்கலாம். ஆனா, யார்கிட்ட அளவுக்கதிகமான பணம் இருக்கோ, அவங்க கண்டிப்பா ஏதாவது ஒரு தப்பு செஞ்சு இருப்பாங்க. அதுல பாதிக்கப்பட்ட யாராவது ஒரு ஆள் இதைச் செய்திருக்கலாம். இதுதான் முதல் சந்தேகம்," சூரி தன் கண்டுபிடிப்பை வெளியிட்டான்.

"அப்படின்னா ரெண்டு பேருக்கும் காமன் எதிரி யாரு?" துருவன் கேட்டான்.

"காமன் எதிரியோ? இல்லை, அவங்களுடைய 'Individual எதிரியோ? யாருக்குத் தெரியும்? இந்த கோணத்துல Investigate பண்ணுவோம். அவங்களுடைய பழக்க வழக்கங்கள் என்னன்னு பார்ப்போம்," சக்தி கூற, துருவன் தலையசைத்தான்.

"சக்தி.. துருவா பக்கத்துக் டீகடையில் போண்டா போடுற டைம் ஆயிடுச்சு நான் போய் சாப்பிட்டு அப்படியே உங்களுக்கும் சூடா நாலு போண்டா

வாங்கிட்டு வரேன்." என்று கூறிவிட்டு அவசரமாக வெளியேற துருவன் தலையில் அடித்துக் கொண்டான்.

"அவன விடுடா" என்று கொஞ்சம் அழுத்தமான குரலில் சொன்ன சக்தி சில வினாடிகள் அமைதியாக யோசித்தான்.

"சக்தி, ஆனா ரெண்டு போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டுமே 'இயற்கை மரணம்'னு சொல்லுது?" துருவன் சந்தேகத்துடன் கேட்டான்.

"ரிப்போர்ட் என்ன சொன்னாலும் நம்ம இன்வெஸ்டிகேஷன் Start பண்ணுவோம். ஒரு சாதாரண 'ஹார்ட் அட்டாக்' கேஸை, 'கொலை'னு அவங்க ஏன் சந்தேகப்படணும்? அங்கதான் ஒரு 'மர்மம்' இருக்கு," என்று சக்தி உறுதியாகச் சொன்னான். துருவனுக்கும் சக்தி சொல்வது சரிதான் என்று தோன்றினாலும் வழக்கை எப்படி மேற்கொண்டு கொண்டு செல்வது என்று அவர்கள் இருவருக்கும் குழப்பம் தோன்றத்தான் செய்தது.

அத்தியாயம்- 4

சக்தியும் துருவனும் வழக்கை வெவ்வேறு கோணங்களில் விசாரிக்கத் தொடங்கினர். முதலில் பைரவராஜ் மற்றும் சரவணனின் பேஸ்புக் பக்கங்களை ஆராய்ந்தனர். எதிர்பார்த்தது போலவே, இருவரும் நெருங்கிய தொடர்பில் இருந்ததற்கான பல ஆதாரங்கள் கிடைத்தன. அன்று மாலை பைரவராஜின் Personal Assistant சுகுமார், விசாரணைக்கு வரவழைக்கப்பட்டான்.

"சொல்லுங்க சுகுமார்... உங்க பாஸ் எப்படி?" என்று சக்தி விசாரணையைத் தொடங்கினான்.

"எப்படின்னா என்ன அர்த்தம் சார்?"

"அவர் Business எப்படி? Character எப்படினு கேட்கிறோம். 'Open ஆகச் சொல்லுங்க. நீங்க சொல்ற ஒரு சின்ன விஷயம் கூட கேஸுக்குப் பெரிய அளவுல Help பண்ணும்," சக்தி நிதானமாகக் சொன்னான்.

"சார்... நான் அவர்கிட்ட வேலைக்குச் சேர்ந்து மூணு மாசம்தான் ஆச்சு, என்னால எனக்கு அவரோட கேரக்டர் பத்தியும் அவ்வளவா தெரியாது பிசினஸ் பத்தியும் ஓரளவுக்கு தான் தெரியும்" சுகுமார் வழிந்த வியர்வையைத் துடைத்தான்.

"ஓகே, லாயர் சரவணனும் உன்னோட பாஸும் எப்படி Friends ஆனாங்க?" சக்தி அடுத்த கேள்வியைக் கேட்டான்.

"அவர் எங்க கம்பெனியோட Legal Advisor கொஞ்சநாள் இருந்தாரு."

"இருந்தாருன்னா... இப்ப யார் Legal Advisor?"

"இப்போ லாயர் ராகவன்தான் Legal Advisor" என்று சுகுமார் பயத்துடன் சொன்னான்.

"சரி. உங்க பாஸோட கேரக்டர் பத்தி உனக்கு என்ன தெரியும்?"என்று துருவன் மிரட்டலான குரலில் கேட்டான்.

"அது.. அவரு ரொம்ப நல்லவரு.." என்று அவன் தடுமாற,துருவன்,சுகுமார் கண்ணத்தில் அறைந்தான்.

"அவருக்கு Ladies weakness உண்டுன்னு கேள்விப்பட்டேன் சார்.., ஆனா எனக்குப் டிலைடால் எதுவும் தெரியாது," சுகுமார் பயந்தபடியே சொல்லி முடித்தான்.

"ஓகே. நாங்க திரும்பக் கூப்பிடுவோம். அப்போ வந்து நாங்க கேக்குற கேள்விக்குப் பதில் சொல்லணும். புரியுதா?" சக்தி, தன் குரலை உயர்த்தி மிரட்டினான். சுகுமார் வெளிறிய முகத்துடன் தலையசைத்துவிட்டுக் கிளம்பினான்.

அடுத்ததாக, சக்தியும் துருவனும் சரவணனின் மனைவி முருகப் பிரியாவை விசாரித்தனர். அவளும், "தன் கணவர் தங்கம்," என்று வழக்கமான வார்த்தைகளையே சொன்னாள். வயதான பெண் என்பதாலும், இப்போது அவசரமில்லை என்ற எண்ணத்திலும் இருவரும் அவளை அனுப்பி வைத்தனர்.

"என்னடா மச்சான்! கேஸ் எல்லாம் எப்படி போய்க்கிட்டு இருக்கு?" என்று சூரிபாபு ஆஜரானான்.

"நீ ஏன்டா இப்படி இம்சை பண்ணிக்கிட்டு இருக்க?" துருவன் கோபமாகக் கேட்டான்.

"Poor Boys! என்ன விட்டுட்டு நீங்க எப்படி இன்வெஸ்டிகேட் பண்ண முடியுமா? என் அறிவையும் திறமையையும் யூஸ் பண்ணிக்கோங்க. Come on," என்று சூரி சிரித்தான்.

"துருவா... பைரவராஜ் மேல, Harassment அல்லது Abuse கேஸ் ஏதாவது இருக்கான்னு செக் பண்ணு," சக்தி ஒரு முக்கியமான சந்தேகத்தைக் கிளப்ப, துருவன் செயலில் இறங்கினான்.

"என்னடா சக்தி... கொலை நடந்த Spot போய் நீ பார்த்தியா?" சூரிபாபு கேட்டான்.

"டேய்..சூரி எதை வச்சு நீ 'கொலை'னு Decide பண்ண?" சக்தி திருப்பிக் கேட்டான்.

"டேய்..எதை வச்சு நீ 'இயற்கை மரணம்'னு டிசைட் பண்ண?" சூரிபாபு எதிர்க்கேள்வி கேட்க, சக்தி அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று யோசித்தான்.

"கொலையைக் கூட இயற்கை மரணம்னு Setup பண்ண முடியும். தெரிஞ்சுக்கோ," சூரிபாபு சொல்ல,"சரி... வா. நீ சொன்ன மாதிரி ஸ்பாட்டுக்கு ஒருதரம் போயிட்டு வருவோம்," என்று மனதிற்குள், 'கருணைக்கிழங்கு மண்டையும் பூசணிக்காய் வயிறுமா இருந்துகிட்டு என்னமா யோசிக்கிறான்' என்று எண்ணிக்கொண்டே பைக்கை ஸ்டார்ட் செய்தான் சக்தி.

அத்தியாயம்- 5

அவர்கள் மூவரும் பைரவராஜ் மரணமடைந்த ரிசார்ட்டுக்குச் சென்றனர். அவர் தங்கியிருந்த அறையை, சக்தி ஒரு இடம்கூட பாக்கியில்லாமல் சல்லடை போட்டுக் அலசினான். துருவன் சுற்றியுள்ள பகுதிகளில் தேடச் சென்றான்.

சூரிபாபுவோ, அறைக்கு வெளியே அழகுக்காக வைக்கப்பட்டிருந்த சிறிய புதர் செடிகளில் கைவைத்து எதையோ துழாவிக் கொண்டிருந்தான். ஜன்னல் வழியே அதைப் பார்த்த சக்தி, "இவனை புத்திசாலின்னு நினைக்கிறதா, லூசுன்னு நினைக்கிறதா?" என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டே, "டேய் பாபு! அங்க என்னடா தேடிட்டு இருக்க?" என்று

ஜன்னல் வழியே கத்தினான். சூரிபாபு மெதுவாக அறையைச் சுற்றிக்கொண்டு உள்ளே வந்தான்.

"என்னடா தேடிக்கிட்டு இருக்க?" என்றான்.

"மச்சான்... அந்தப் புதர்ல இந்த Bottle கிடைச்சது," என்று சூரி ஏலக்காய் டப்பா சைஸில் இருந்த ஒரு சிறிய கண்ணாடி பாட்டிலை நீட்டினான். சக்தி அந்த பாட்டிலில் இருந்த Label உற்று நோக்கினான். பொடிப் பொடியாய் இருந்த எழுத்துக்களும், சில தொழில்நுட்ப வார்த்தைகளும் இருந்தன. அவனுக்கு எதுவும் சரியாகப் புலப்படவில்லை.

"வெரிகுட் சூரி! இதைப் பாதுகாப்பா எடுத்து Lab Test கொடு," சக்தி அவனைத் தோளில் தட்டிப் பாராட்டினான். "உனக்கு பிரியாணி அறிவு." என்றான். அவர்கள் மூவரும் அலுவலகத்தில் அமர்ந்திருந்தனர். துருவன் சில தகவல்களைத் திரட்டி வந்தான்.

"சக்தி... பைரவராஜ் மேல, அவருடைய ஆபீஸ்ல வேலை செஞ்ச சம்யுக்தாங்கிற பொண்ணு, Harassment Complaint கொடுத்திருக்கா. ஆனா... கம்ப்ளைன்ட் கொடுத்த அடுத்த நாளே வாபஸ் வாங்கி இருக்கா," துருவன் சீரியஸான முகத்துடன் சொன்னான்.

"இதுல என்ன அதிசயம் இருக்கு? ஒண்ணு மிரட்டி இருப்பாங்க, இல்லைன்னா துட்டு கொடுத்திருப்பாங்க. இதுதான் 'Common Scenario" சூரிபாபு மிகவும் இயல்பாகச் சொன்னான். அதை கேட்டு துருவன் அவனை முறைக்க, சக்தி, "He is right" என்றான்.

"அதே மாதிரி, லாயர் சரவணன் கிட்ட work பண்ணிட்டு இருந்த மூணு Lady Juniors , சடனா வேலையை விட்டு நின்னுருக்காங்க," என்று துருவன், சூரிபாபுவை எரிச்சலோடு பார்த்தபடி சொன்னான்.

சக்தி ஏதோ சொல்ல வாயெடுக்க, "இவரு சில்மிஷம் பண்ணியிருப்பாரு. அந்தப் பொண்ணுங்க வேலையை விட்டு நின்னுருக்கும்," சூரிபாபு சொன்னான்.

"இதெல்லாம் எப்ப நடந்தது?" சக்தி கேட்டான்.

"அஞ்சாறு மாசம் இருக்கும்," துருவன் பதிலளித்தான்.

"உங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப முக்கியமான Matter ஒண்ணு சொல்லட்டா?" சூரிபாபு கேட்டான்.

"ஏன்டா இப்படி நேரம் காலம் தெரியாம மொக்கை போட்டுட்டு இருக்க?" துருவன் கோபமாகக் கத்த, சக்தி கையமர்த்தி, சூரிபாபுவைப் பார்த்து, "சொல்லு" என்றான்.

"பைரவராஜூம் சரவணனும், 'வைரம்'ங்கிற பேர்ல Trust ஒண்ணு வெச்சு நடத்திட்டு வர்றாங்க," சூரிபாபு ஆரம்பித்தான். "டேய் துருவா... உனக்குப் பெருமூளைன்னா எனக்குச் சிறுமூளை. கொஞ்சம் கேளு. அந்த ட்ரஸ்ட் மூலமா உதவி வாங்கிப் படிச்ச எட்டுப் பொண்ணுங்க காணாமப் போய் இருக்காங்க," சூரிபாபு சொல்லி முடிக்க, இருவரும் அதிர்ந்து போய் எழுந்து நின்றனர்.

"ஆனா எந்த 'Complaint இல்லையே?" சக்தி குழப்பத்துடன் கேட்டான்.

"அவனுங்க ஊர்ல பெரிய கையா இருக்காங்க. அதனால, 'செட்டில்' பண்ண வேண்டியதைச் செட்டில் பண்ணி இருப்பாங்க," சூரிபாபு சொன்னான்.

"உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்? யார் சொன்னாங்க?" துருவன் கோபத்துடன் கேட்டான்.

"காந்தி தாத்தா!" என்று கூறியவாறே, தன் பர்ஸிலிருந்து ஒரு ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்து காண்பித்தான். "வாட்ச்மேனுக்கு இதுமாதிரி நாலு கொடுத்தேன், காந்தி தாத்தா கொள்கைக்கு மரியாதை இருக்கோ இல்லையோ, அவர் படத்துக்கு நிறைய மரியாதை இருக்கு. இதுதான் 'Reality காந்தி அதெல்லாம் பண்ண கூடாதுன்னு சொன்னாரோ அதையெல்லாம் அவர் படம் போட்டு நோட்டை வாங்கிட்டு ரொம்ப தைரியமா பண்றாங்க," சூரி கிண்டல் செய்வது போல் உலக நடப்பைப் பளிச்சென்று கூறினான். சூரி பாபு என்ன தான் விளையாட்டாக அந்த வழுக்கை எடுத்து பேசினாலும் சக்தியின் மனதிற்குள் சூரி சொல்வது உண்மை போல தோன்றியது தொடர்ந்து அவன் போக்கில் இந்த வழக்கை விசாரித்தால் என்ன என்று கேள்வியையும் அவனுக்குள் தோற்றுவித்தது.

"ஓகே. சரவணன் கார் ஆக்சிடென்ட் ஆன இடத்துக்குப் போய் பார்ப்போம்," சக்தி கூற, மூவரும் கிளம்பினர். சக்தியின் மனதிற்குள் தொடர்ந்து இறந்து போன இருவரும் ஏதோ ஒரு பெரிய குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டு இருக்கின்றனர்.' என்ற எண்ணம் எழ அவன் அந்த வழக்கின் மீது கொண்டிருந்த பார்வையையும் மெல்ல மாற்ற முயன்றான்.

அத்தியாயம்- 6

சரவணனின் கார் விபத்துக்குள்ளான இடத்தில் பெரிதாய் எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. அது பார்ப்பதற்குச் சாதாரணமாக நடந்த ஒரு 'Highway Accident போலவே இருந்தது.

"சக்தி... சரவணனோட கார் எப்படியும் செக் போஸ்ட், டோல்கேட் தாண்டிதானே வந்திருக்கும்? டோல்கேட்ல CCTV Camera இருக்கும். இது

கொலையாகிற பட்சத்துல, அந்தக் கேமரா பதிவுகளை செக் பண்ணா ஏதாவது க்ளூ கிடைக்கலாம்," துருவன் ஒரு யோசனையைச் சொன்னான்.

அவர்கள் மூவரும் அங்கிருந்து கிளம்பி டோல்கேட் வந்தனர். தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, விபத்து நடந்த அன்றைய கேமரா பதிவுகளை ஆராய ஆரம்பித்தனர். இரண்டு மூன்று முறைக்கு மேல் திரும்பத் திரும்பப் பார்த்த பிறகு, துருவனும் சக்தியும் சலிப்புடன் எழுந்தனர். சூரி மட்டும் கேமரா பதிவுகளைக் கண்ணெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சூரி! அப்படி என்னத பாத்துக்கிட்டு இருக்க?" சக்தி கேட்டான்.

"சரவணன் டோல்கேட்ல பணம் கட்டி, ரசீது வாங்குகிறார். ரைட் சைடுல ஒரு பொண்ணு, அவர்கிட்ட குனிஞ்சு ஏதோ கேக்குது பாரு," சூரிபாபு கூற, சக்தி உற்று நோக்கினான்.

"அதோ பாரு. கையிலேயே கொய்யாப்பழம் சம்திங் ஏதோ வச்சிருக்கா. 'வாங்கிக்கோ'ன்னு கேட்டுருப்பா. இதுல என்ன இருக்கு?" துருவன் சாதாரணமாகச் சொன்னான்.

"சக்தி! நாம பைரவராஜ் ரிசார்ட்ல கண்டுபிடிச்ச மாதிரி, இவளும் ஏதாவது பாட்டில் கொடுத்திருந்தா?" சூரி சீரியஸாகச் சொன்னான். சரவணன் அந்தக் டோல்கேட்டைக் கடந்த ஒரு பதினைந்து நிமிடத்திற்கு உள்ளாகவே கார் விபத்துக்குள்ளானது என்று சக்தி யோசித்து கண்டுபிடித்தான். அதேநேரம் சூரியின் அலைபேசி அடித்தது. அதை அவசரமாக அட்டென்ட் செய்து காதில் வைத்தவன்,"ஹலோ... சூப்பர்!" என்று கட்டிவிட்டு இணைப்பைத் துண்டித்தான்.

"மச்சான்! ரிசார்ட்ல கிடைச்ச பாட்டிலை டெஸ்ட்டுக்குக் கொடுத்திருந்தோம்ல? ரிசல்ட் வந்திருச்சாம். ஆபிஸுக்கு அனுப்பிட்டாங்களாம்," சூரி மகிழ்வுடன் சொன்னான்.

"ஓகே. நான் போய் ரிப்போர்ட்டைப் பார்க்கிறேன். சூரி, நீ போய், டோல்கேட்ல சரவணன் கிட்ட பேசுன அந்தப் பொண்ணு யாருன்னு பாரு. துருவன், நீ போய், 'வைரம் ட்ரஸ்ட்ல' காணாமல் போன பொண்ணுங்களோட Details கலெக்ட் பண்ணு,"என்று மின்னல் வேகத்தில் கூறிவிட்டு சக்தி அலுவலகம் விரைந்தான்.

அலுவலகம் வந்த சக்தி, லேப் ரிப்போர்ட்டைப் பிரித்தான். அதில் தெளிவாக ஒரு தகவல் குறிப்பிடப்பட்டிருந்தது: 'அந்தச் சிறிய பாட்டிலில் Sarin Gas இருந்தது.' என்று குறிப்பிடப்பட்டது.

சரின் வாயு (Sarin Gas):

வாழ்க்கையில் யாரும் கற்பனை செய்திடக் கூடாத ஒரு கொடூர விஷ வாயு இது. இது இதயத்தை இறுக்கி, மூளையின் செயல்பாடுகளைப் பாதிக்கும். இதன் விளைவாக, அந்நபர் இறந்த பிறகு, போஸ்ட்மார்ட்டம் சோதனையில் 'மாரடைப்பு' என்றுதான் முடிவு வரும். இரண்டாம் உலகப்போரில் எதிரி நாட்டு படை வீரர்களை தடயம் இல்லாமல் கொலை செய்ய பயன்படுத்தப்படும் இந்த வாயு, விரைவில் மரணத்தை ஏற்படுத்தக்கூடியது. அந்த வாயுவைப் பற்றி அவன் மேலும் கூகுள் செய்து விரிவாக தெரிந்து கொண்டான். அந்த லேப் ரிப்போர்ட் மற்றும் தான் படித்து தெரிந்து கொண்ட விஷயங்கள் எல்லாமே சக்திக்கு அதிர்ச்சியாயிருந்தது. அவனை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்க, துருவன் கால் செய்தான்.

"ஹலோ...ஓகே. நீ ஆபிஸுக்கு வா. சூரியையும் வரச் சொல்லு," சக்தி சற்றுத் தடுமாற்றத்துடன் கூறி முடித்தான்.

அரை மணி நேரத்தில் அவர்கள் மூவரும் கூட, சக்தி முதலில் லேப் டெஸ்ட் ரிப்போர்ட்டை விளக்கி முடித்தான். "இது வெல் Planned Murder . இப்போ துருவன் நீ கண்டுபிடிச்சதைச் சொல்லு," என்றான்.

"அந்த டிரஸ்ட்ல காணாமல் போன எல்லாப் பொண்ணுங்களுமே, அப்பா இல்லாத பெண்கள். அதுலயும் குறிப்பா, நல்லா படிக்கிற பெண்கள்," துருவன் தன் கண்டுபிடிப்பைச் சொன்னான்.

"நீ அந்தப் பொண்ணுங்களோட வீட்டுக்குப் போய் Family -ய ஆர் அந்த பொண்ணுங்களோட காடியனை பாத்து பேசினியா?" சூரிபாபு ஆர்வத்துடன் கேட்டான்.

துருவன், "ஆம், ஏழு பொண்ணுங்களோட ஃபேமிலியுமே அவங்க'காணாமல் போனதா' சொல்றாங்க. ஆனா, அந்த ட்ரஸ்ட்ல விசாரிச்சதுல, அவங்க எல்லாருக்கும் வேலை வாங்கிக் கொடுத்து, வெளியூர் அப்பரம் வெளி State போயிருக்கலாம்னு சொல்றாங்க.ட்ரஸ்ட்ல சொன்ன எல்லாமே 'Fake Information" என்றான்.

சூரிபாபு எதையோ தீவிரமாக யோசிக்க, சக்தி, "வேற ஏதாவது டீடெயில்ஸ் கிடைச்சுதா?" என்று கேட்டான்.

"ஆமா சக்தி. எட்டுப் பொண்ணுங்கன்னு சொன்னேன்ல. அதுல எட்டாவது பொண்ணு இல்ல," துருவன் நிறுத்த, சக்தி குழப்பத்துடன் நோக்கினான்.

"What do you mean?" சக்தி கேட்டான்.

"I mean அந்தப் பொண்ணு வீட்டுக்குப் போய் விசாரிச்சப்ப... அவங்களுக்குப் பொண்ணே கிடையாதாம். மூணு பசங்களாம்," துருவன் சொன்னான்.

"அப்படின்னா...?" சக்தி குழப்பத்தோடு துருவனை நோக்கினான்.

"புவர் பாய்ஸ்! என்ன யோசிக்கிறீங்க? அது 'பொண்ணா இல்லாம, திருநங்கையா இருந்தா...!' அப்போதான் காணாமல் போனதுக்குக் கம்ப்ளைன்ட் இல்லாம இருந்திருக்கும்!" சூரிபாபு சொன்னான்.

"என்னடா லூசுத்தனமா?" துருவன் கோபப்பட, "வாய்ப்பிருக்கு..." சக்தி யோசனையுடன் கூறினான். சூரி பாபு சொன்ன விஷயங்கள் எல்லாமே வழக்கின் திசையை மாற்றி அமைத்ததை சக்தி உணர்ந்தான்.

அத்தியாயம்- 7

வழக்கு சம்பந்தமான அத்தனை தகவல்களையும் சக்தி தன்னுடைய லேப்டாப்பில் ஒரு ரிப்போர்ட்டாக Type செய்து வைத்திருந்தான். பைரவராஜின் சொத்து விவரங்கள், சரவணனின் சட்டரீதியான மோசடிகள், சரின் வாயுவின் தடயம் என அத்தனையும் அதில் பதிவாகியிருந்தன. நாளை கமிஷனிடம் சமர்ப்பித்துவிடலாம் என்ற முடிவோடு, மடிக்கணினியையும் எடுத்துக்கொண்டு வீட்டிற்குக் கிளம்பினான்.

அலுவலகம் இருந்த தெருவில், காரை ஓட்டிக்கொண்டு செல்லும் வழியில், ஒரு வயதான பெண்மணி அவனிடம், "தம்பி, ஒரு Address தேடி வந்தேன். போகிற வழியில் இறக்கிவிடுறியா?" என்று கேட்டாள்.

சக்தி, "போற வழியிலதான்மா. வாங்க, இறக்கி விடுறேன்," என்று சொல்லும்போதே, அந்தப் பெண் கண்ணால் பின்னால் இருக்கும் கட்டிடத்தை நோக்கி சைகை காட்டுவது போல் அவனுக்குத் தோன்றியது. அவன் மனதில் ஒரு மின்னல் வெட்டியது. 'வேவு பார்க்கப்படுகிறோமா?' அவன் பதற்றத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு, உடனடியாக தன் இருப்பிடத்தையும், தன்னுடன் பேசிக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் அடையாளத்தையும் சூரிபாபுவிற்கு வாட்ஸ்அப் செய்தான்.

சூரிபாபுவின் பதில் உடனடியாக வந்தது: 'நான் கவனிச்சுக்கிறேன். நீ மூவ் ஆகு' அதை படித்ததும் காரைக் கிளப்பிக் கொண்டு சக்தி அங்கிருந்து நகர்ந்தான். அவள் சக்தியின் அலுவலகத்தின் பின்புறமாக வேகமாக நடந்தாள். அங்கே, இருண்ட மூலையில், ஒரு இளம்பெண் ஆக்ரோஷமான கண்களுடன் காத்திருந்தாள்.

"வேலை முடிஞ்சதா, அதிரூபா?" என்று அவள் கேட்க, "இன்னும் இல்ல, மிதிலா. Laptop உள்ள இருக்கு. சீக்கிரம்," என்று அதிரூப சுந்தரி பதறினாள்.

இருவருமாய் துருப்பிடித்த கழிவுநீர்க் குழாயைப் பிடித்து ஏறி, முதல் மாடியில் இருந்த சக்தியின் அலுவலக அறையிலிருந்த Bathroom ஜன்னல் வழியே உள்ளே குதித்தனர். அவர்கள் மெல்ல அறைக்குள் நுழைந்தனர். அதிரூபா மேசையின் மீது இருந்த மடிக்கணினியை வெறித்துப் பார்த்தாள். அடுத்த நொடியே அதைக் கைப்பற்றி, தான் மறைத்து வைத்திருந்த பாட்டிலில் இருந்த எரி திரவத்தை அதன் மீது ஊற்றி எரிக்க முயன்றாள்.

திடீரென அறையின் மூலையில் இருந்து ஒரு Flash Light வெளிச்சம் அடிக்க, அவர்கள் அதிர்ந்தனர். அது சூரிபாபுவின் அலைபேசி கேமரா துப்பிய வெளிச்சம் என்று உணர்ந்து திடுக்கிட்டனர், "என்ன தையிரியம் இருந்த இங்க வந்திருப்பிங்க?" என்ற துருவனின் குரலும், "பிடிங்கடா!" என்ற சக்தியின் ஆவேசக் குரலும் ஒலித்தன.அவர்காள் இருவரும் தப்பிக்க முயன்று தோற்றுப் போயினர்.

சக்தி அவர்களை விசாரணை அறையில் வைத்து விசாரிக்க ஆரம்பித்தான். பல மணி நேரங்கள் இருவரும் முரண்டு பிடித்து, சுவரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"உங்க மௌனம் எதையும் மாத்தப் போறது இல்ல! ஏன் இந்தக் கொலைகளைச் எதுக்கான செஞ்சீங்கன்னு சொல்லிடுங்க," சக்தி மென்மையாகப் பேசத் தொடங்கினான். அவர்கள் அலைச்சியமாக அவனை பார்க்க அவன் எரிச்சல் அடைந்தனர்.

"உங்க பக்கம் ஒரு நியாயம் இருந்தா, நாங்க Legally ஹெல்ப் பண்ணத் தயாரா இருக்கோம். இல்லைன்னா, பேன்டிங்கல இருக்குற மொத்த Murder கேசையும் உங்க தலையில போட்டு கேஸை முடிச்சுடுவோம்."

"உன்னால என்ன உதவி செய்ய முடியும்?! இல்ல... உன் சட்டத்தால எங்களுக்கு என்ன நீதி கொடுக்க முடியும்?!" வயதான பெண் ஆவேசமாகக் கத்தினாள்.

"ஆமாண்டா! இந்த நாலு சுவத்துக்குள்ள எங்க வலிக்காக நீ கண்ணீர் விட்டா போதும்னு நினைக்கிறியா? சட்டம் எங்களுக்குப் பாதுகாப்பு கொடுத்திருந்தா, நாங்க ஏன்டா கொலை செய்யணும்?!" அதிரூப சுந்தரியின் குரல் ஆக்ரோஷத்தில் வெடித்தது. "இந்த ஆண்கள் சமுதாயம் எங்க கஷ்டத்தை, வலியை, கண்ணீரை ஒரு நாளும் புரிஞ்சுக்காது!" என்று கொதித்தாள்.

துருவன் கோபத்துடன் அவர்களை முறைத்தான். சூரிபாபு சட்டென்று துருவனைத் தடுத்து, அந்தப் பெண்கள் அருகில் சென்று நாற்காலியைப் போட்டுக் குனிந்தான்.

"உங்க கஷ்டம் என்னன்னு சொல்லுங்கம்மா. நான் ஒரு போலீஸ் Officer கேட்கல. ஒரு மனுஷனா கேட்கிறேன்," சூரிபாபுவின் குரலில் உண்மையான உருக்கம் இருந்தது. "உங்க மன உறுதி யாருக்கும் வராது. இந்த சமுதாயமே உங்களுக்கு எதிராக இருந்தும், எதிர்த்துப் போராடி இருக்கீங்க. உங்க வலிமைக்கு நான் தலை வணங்குறேன். தயவுசெஞ்சு சொல்லுங்க..." என்றான்.

சூரியின் நெகிழ்ச்சியான வார்த்தைகளில் இருந்த நேர்மை, மிதிலாவின் இறுக்கத்தைக் குறைத்தது. அவள் கண்ணீருடன் பேச ஆரம்பித்தாள்:

"என் பேரு மிதிலா... என் பதினாறு வயசுல நான் ஒரு திருநங்கையின்னு தெரிஞ்சதும், வீட்டை விட்டு ஓடி வந்துட்டேன். 'வைரம் ட்ரஸ்ட்' ல தான் அடைக்கலம் கிடைச்சது. நர்சிங் படிச்சேன். ஆனா... எனக்கு மும்பையில வேலை கிடைச்சிருக்குன்னு சொல்லி, அழைச்சிட்டு போய் 10 லட்சத்துக்கு விலை பேசி வித்துட்டாங்க! நான் சிகப்பு விளக்குப் பகுதில்ல" என்று அவள் மேற்க்கொண்டு பேசமுடியாமல் திணறினாள். சூரி அவளுக்கு அவசாகம் அளித்து அமைதிகாக்க,அவள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு அமைதியானாள். "அங்கதான் தெரிஞ்சது, அந்த Brokerage Centre! அப்பா இல்லாத ஏழைக் குடும்பத்துப் பொண்ணுங்களையும், என்ன மாதிரி திருநங்கைகளையும் கடத்தி, முப்பை சிவப்பு விளக்கு அப்பரம் வெளிநாடுகளுக்கு ஏலம் விடுறாங்க" என்றாள்.

அதிரூப சுந்தரியின் குரல் பயங்கரமான ரகசியத்தை வெளிப்படுத்தியது. "அந்த விடுதியில, முரண்டு பிடிக்கிற எல்லாப் பெண்களுக்கும் போதை ஊசி போட்டு, கன்ரோல் பண்ணுவாங்க. ஒரு வயதான பெண் அவங்க பேரு, கங்கு, அவங்க உதவியாலதான் அங்க இருந்த நாங்க தப்பிச்சோம். கங்குன் தான் எங்க தோழிகள் பலர், இதே போல போதை ஊசியால உடல் சிதைஞ்சு இறந்து போயிட்டாங்கன்னு! சொன்னாங்க. அதான், நான் படிச்ச நர்சிங் அறிவை வெச்சு, சரின் வாயுவை வெச்சு பழி வாங்கினோம்.

பைரவராஜும் சரவணனும் இந்த நெட்வொர்க்கின் தலைகள், அவங்க உயிரோட இருந்தா ஏழை அநாதை பெண்களுக்கு பாதுகாப்பில்லை."

என்று மிதிலா கண்ணீரைத் துடைத்தபடியே முடித்தாள்.

"நாங்க மாட்டுவோன்னு தெரியும். ஆனா அவங்க கதை முடிஞ்சது" என்றாள்.

அந்த அறையில் கனமான மௌனம் நிலவியது. சக்திக்கு மனம் பாராங்கல்லென கனத்தது. அப்போது, துருவன் பதற்றத்துடன் உள்ளே ஓடி வந்து, சக்தியின் காதருகில் ஏதோ கூறினான்.

"என்ன? ஹார்ட் அட்டாக்கா?" சக்தி அலறியபடியே பதட்டமாய் வெளியேறினான். அவர்களைப் பின் தொடர்ந்து சூரிபாபுவும் வெளியே வந்தான்.

"என்னடா சக்தி? என்ன ஆச்சு?" சூரி குழப்பத்துடன் கேட்டான்.

"அந்த ட்ரஸ்ட்டோட மேனேஜர், சுப்ரமணியம்... ஹார்ட் அட்டாக்ல இறந்துட்டாராம்!" என்றான்.

சூரிபாபு திகைத்து நிற்க, விசாரணை அறையிலிருந்து மிதிலாவும் அதிரூப சுந்தரியும் உரக்கச் சிரிப்பது கேட்டது. அந்தக் கொடூரமான சிரிப்பு, அவர்களின் வெற்றியை உலகுக்கு அறிவிப்பது போல இருந்தது.

"அவங்க நினைச்சதை முடிச்சுட்டாங்க. அதனாலதான் சிரிக்கிறாங்க," சக்தி கசப்புடன் சொன்னான்.

துருவன் தன் கண்களில் நீர் துளிர்க்க, "டேய்! ஆல்ரெடி மனசாலும், உடம்பாலயும் நிறைய பாதிக்கப்பட்ட இவங்களை... நாம ஏன்டா சட்டத்தாலயும் தண்டிக்கணும்?" என்று உடைந்துபோன குரலில் கேட்டான்.

"நீயாடா பேசுற! உன் சீரியஸ்னஸ்லாம் எங்கே போச்சு?" சூரி வியந்து போய் கேட்க, துருவன் துளித்த கண்ணீரைத் துடைத்தவாறே தலையசைத்தான். இந்த மனிதக் கடத்தலின் கோர முகம் அவனின் போலீஸ் மனசாட்சியை உலுக்கி எடுத்திருந்தது.

சக்தி ஒரு நிமிடம் சிந்தனையில் ஆழ்ந்தான். சட்டமும் நீதியும் நேருக்கு நேர் மோதின.

"ஒரு நிமிஷம் நில்லுங்க," என்று சொல்லிவிட்டு, சக்தி தன் லேப்டாப்பைத் திறந்து உட்கார்ந்தான். அதன் Keyboard அவனுடைய விரல்கள் மின்னல் வேகத்தில் அசைந்தன. பைரவராஜ், சரவணன் ஆகியோரின் 'இயற்கை மரணம்' என்ற போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டைத் தவிர, சரின் வாயுவின் தடயம், திருநங்கை மிதிலாவின் வாக்குமூலம், மனிதக் கடத்தலின் ஆதாரங்கள் என மற்ற அனைத்து விசாரணை விவரங்களையும் நிரந்தரமாக அழித்துவிட்டு, ஒரு புதிய, இறுதியான Final Report உருவாக்கினான்.

"என்ன..டா பண்ற?" என்று துருவன் கேட்க, "இப்போ இவங்க ரெண்டு பேரையும் என்ன பண்றது?" சக்தி கேட்டான்.

"இந்தக் கொலைகளுக்கான நீதி அவங்களுக்குக் கிடைச்சிருச்சு. ஆனா, இந்த Network இன்னும் பல இடத்துல இருக்கலாம். இவங்க உதவியோட, இந்தியா முழுக்க இருக்கிற அந்த நெட்வொர்க்கை ரகசியமா இன்வெஸ்டிகேட் பண்ணிப் பிடிக்கணும். இதுதான் நம்ம வேலை சக்தி!" சூரிபாபுவின் கோபம் இப்போது ஒரு உறுதியான முடிவாக மாறியது. சக்தி, தன் தோளில் இருந்த சுமை நீங்கியது போல் நிமிர்ந்தான்.

பைரவராஜ், சரவணன் வழக்கு 'இயற்கை மரணம்' தான் என்று அதிகாரப்பூர்வமாக முடிவெடுக்கப்பட்டது. கமிஷனரின் ரகசிய உதவியுடன், இந்தியா முழுக்க இருந்த இந்த மனிதக் கடத்தல் நெட்வொர்க்கைத் தேடும் பணியில் சக்தி, துருவன், சூரி மூவரும் ரகசியமாக இறங்கினர். மிதிலாவும் அதிரூப சுந்தரியும், தங்கள் தோழிகளுக்கு நீதி வாங்கித் தரும் நோக்கத்துடன், அந்த நெட்வொர்க்கிற்கு எதிராகச் செயல்படும் போலீஸ் Informers சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

**********முற்றும்**********

'வனக்கொலைகள்' குறுநாவல் உங்களுக்குப் பிடிச்சிருந்தா, இது மாதிரி தொடர்ந்து நிறைய நாவல்ஸ் எழுதறத்துக்கு உங்க சப்போர்ட் ரொம்ப ரொம்ப முக்கியம்! சோ கண்டிப்பா நம்ம Subscribe பண்ணிடுங்க!

உங்களுடைய Likes தான் எங்களுக்கு பெரிய Energy! சோ லைக் பண்ணுங்க.

இந்தக் கதை பத்தி உங்க மனசுல என்ன தோணிச்சோ, அதை ஒரு கமண்ட்டா போட்டுடுங்க! இந்த குறுநாவலை உங்க ஃபிரெண்ட்ஸுக்கும், ஃபேமிலிக்கும் Share பண்ணுங்க

நன்றி வணக்கம்!